செய்தி வெளியீடு எண்–19 நாள்–5.1.2008

# பத்திரிக்கை செய்தி

## மூன்று மீனவர்களை மீட்க தமிழக அரசு நடவடிக்கை

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 3 மீனவர்களை இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து 1.1.2008 அன்று நள்ளிரவில் 740 மீனவர்கள் மீன்துறையின் அனுமதிச் சீட்டுடன் மீன்பிடிக்க 132 படகுகளில் சென்றவர்கள் 03.01.2008 அன்று கரை திரும்ப வேண்டும். இவர்களில், 02.01.2008 அன்று 6 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் 31 மீனவர்கள் இலங்கை கடற்பகுதிக்குள் சென்றதால் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இத்தகவல் பெறப்பட்டதும் தமிழக அரசு இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தையும் சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்தையும் தொடர்பு கொண்டு இலங்கை கடற்படையினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ள 31 மீனவர்கள் மற்றும் 6 படகுகளை விடுவிக்க உடனடி நடவடிக்கை மேற்கொண்டது 03.01.2008 அன்று இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட 28 மீனவர்கள் மற்றும் 3 படகுகள் தாயகம் அழைத்து வர, இந்திய கடலோர காவற்படை கப்பல் ஏற்பாடு செய்தது. இந்திய கடலோர காவற்படையால் அழைத்து வரப்பட்ட 28 மீனவர்கள் மற்றும் 3 விசைப்படகுகள் 04.01.2008 அன்று காலை 03.30 மணியளவில் நாகப்பட்டினம் வந்து சேர்ந்தனர்.

மீதமுள்ள 3 மீனவர்கள் மற்றும் விசைப்படகுகள் உரிய ஆவணங்கள் இல்லாததால் இலங்கை கடற்படை கட்டுப்பாட்டிலேயே உள்ளனர். 3 மீனவர்கள் மற்றும் 3 மீன்பிடி விசைப்படகுளை விடுவித்து தாயகத்திற்கு அழைத்துவர இந்திய அரசின் வெளி விவகாரத்துறை, இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் சென்னையிலுள்ள இலங்கை துணை தூதரகம் மூலம் தமிழக அரசால் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்துறை.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

**Press Release No-19** **Dated-5/1/2007**

**PRESS NOTE**

# TAMILNADU GOVERNMENT TAKES STEPS FOR RELEASE OF THREE FISHERMEN

THE GOVERNMENT OF TAMILNADU IS TAKING STEPS FOR THE RELEASE OF 3 FISHERMEN BELONGING TO NAGAPATTINAM, NOW UNDER THE CUSTODY OF SRILANKAN NAVY.

ON 1.1.2008 MIDNIGHT 740 FISHERMEN IN 132 FISHING BOATS WENT FOR FISHING FROM NAGAPATTINAM BASE AFTER OBTAINING FISHING TOKENS FROM THE DEPARTMENT OF FISHERIES AND WERE DUE TO RETURN ON 3-1-2008. OUT OF THESE, 31 FISHERMEN IN 6 BOATS WERE ARRESTED BY THE SRI LANKAN NAVY WHEN THEY STRAYED INTO SRILANKAN WATERS ON 2-1-2008.

ON RECEIPT OF INFORMATION, THE GOVERNMENT OF TAMILNADU IMMEDIATELY CONTACTED THE HIGH COMMISSION OF INDIA AT COLOMBO, AND THE DEPUTY HIGH COMMISSION OF SRILANKA AT CHENNAI WITH A REQUEST TO ARRANGE FOR THE REPATRIATION OF THE APPREHENDED FISHERMEN AND THEIR BOATS. THE INDIAN COAST GUARD DEPLOYED ITS SHIP TO FACILITATE THE REPATRIATION OF BOATS AND THE FISHERMEN ON 3-1-2008 AT 6.00 AM. THEY BROUGHT BACK 28

APPREHENDED FISHERMEN WITH THEIR THREE BOATS AND THEY REACHED NAGAPATTINAM AT 3.30 HOURS ON 04-01-2008.

THE REMAINING THREE FISHERMEN AND THREE BOATS ARE STILL UNDER THE CUSTODY OF THE SRILANKAN NAVY SINCE THEY DID NOT HAVE VALID PAPERS. ALL EARNEST EFFORTS ARE BEING TAKEN BY THE GOVERNMENT OF TAMILNADU TO REPATRIATE THE THREE FISHERMEN AND BOATS THROUGH THE MINISTRY OF EXTERNAL AFFAIRS, GOVERNMENT OF INDIA, INDIAN HIGH COMMISSION AT COLOMBO AND THE DEPUTY HIGH COMMISSION, SRILANKA IN CHENNAI.

SPECIAL COMMISSIONER AND SECRETARY TO GOVERNMENT,
ANIMAL HUSBANDRY, DAIRYING AND FISHERIES DEPARTMENT

Issued By – DIPR , Ch-9.